பாட்டெழுது!

பாட்டெழுது! தமிழ்ப்
பாட்டெழுது!—இந்தப்
பாரினில் உள்ளவர் பாட்டெழுது!
கூட்டில் உயிரினில்
யாவரும் ஒன்றென
எடுத்துரைக் கும்ஒரு
பாட்டெழுது!—புதுப்—பாட்டெழுது!

ஏட்டை எடு; ஒரு
தூவலெடு!—நன்றாய்
எண்ணிய பின்ஒரு பாட்டெழுது!
நாட்டைத் திருத்திட
நலிவை ஒழித்திட
நாளும் விளங்கிடும்
பாட்டெழுது—தம்பி—பாட்டெழுது!

நிலவெழுதி, ஆற்று
நீரெழுதி—பலர்
நீண்ட பொழுதினைத் தாண்டிவிட்டார்!
மலரினைப் பாடினார்;
மலையினைப் பாடினார்;
மக்களைப் பற்றி,நீ
பாட்டெழுது!—உயர்—பாட்டெழுது!

காதலினால், துன்ப
மோதலினால்—தென்றற்
காற்றையும் ஊற்றையும் பாடிவிட்டார்!
சாதலைப் பாடினார்;
ஈதலைப் பாடினார்,
சழக்கரைப் பற்றி,நீ
பாட்டெழுது!—வெறிப்—பாட்டெழுது!

புல்லினைப் பார்; ஒரு
புழுவினைப் பார்—குப்பைப்
புழுதியில் உழன்றிடும் மக்களைப்பார்!
தொல்லையைப் பார்; அவர்
துயரினைப் பார்;அதைத்
தோண்டிப் புதைத்திடும்
பாட்டெழுது—மறப்—பாட்டெழுது!

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்,

குரல்: 4: இசை: 8-

விலை: 25 காசு.

நாட்டை மலர்த்திட நடையிடு தம்பி!

மலர்க்கூடை தூக்கிப் போவாள் ஒருத்தி;
மலக்கூடை தூக்கி வாழ்வாள் ஒருத்தி!
இலையெனில் ஒருத்தி இழிவைச் சுமப்பதா?
இந்நிலை ஒழித்திடல் எந்தநாள் தம்பி?

இழுத்துச் செல்லும் வண்டியில் ஒருவன்
ஏறிப் போவான்; இழுப்பான் ஒருவன்!
புழுத்த குமுகாயப் புரையினை மண்ணில்
புதைத்திடல் என்றோ? புகலுவாய் தம்பி!

காலையி லிருந்து மாலை வரைக்கும்
கழுத்துநரம் பொடியக் கருகுவான் ஒருவன்;
வேலையொன் றின்றி விலாவரை உண்ணும்
வீணரை வீழ்த்துநாள் எந்தநாள் தம்பி?

உலகம் உண்டிட உழுவான் ஒருவன்;
உண்டு,ஊர் சுற்றி உறங்குவான் ஒருவன்!
புலையுங் கொடுமையும் புரைமிகப் புழுக்கும்
புன்மை வழக்கினைப் பொசுக்குவாய் தம்பி!

பசியால் வாடிடும் பாட்டாளி ஒருவன்;
பசித்திட மருந்துண்ணும் பழிமகன் ஒருவன்!
நசியா நிலையினை நசுக்குவ தென்றோ?
நாட்டை மலர்த்திட நடையிடு தம்பி!

மண்ணையும் கல்லையும் மனத்தையும் வருத்தி
மாட மாளிகை எழுப்புவான் ஒருவன்,
திண்ணையு மின்றித் தெருவில் வாழ்வதா?
தேன்,பால் பழமுண்டு வீணர் திரிவதா?

நெய்யுந் தொழில்செய் நெசவாளித் தோழன்
நீட்டிப் படுக்கக் கந்தையும் இல்லாப்
பொய்யும் புலையும் மலிந்திடும் போக்கின்
பூண்டை யறுக்குநாள் எந்தநாள் தம்பி!

நடந்து, நடந்து, நலிவதா ஒருவன்?
நலமிகு ஊர்தியில் நயப்பதா ஒருவன்?
கடந்தடு போர்செயுங் காலமும் வந்தது;
களிறே! புறப்படு; ஆற்றுக கடமையே!

துரை-மாணிக்கம்.

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

இசை-4 | தி.பி.-உ00க-மீனம்-மார்ச்சு-ஏப்பிரல்-70 | குரல்-8.

மக்கள் என்று திருந்துவாரோ?

பொன்னன் எனும் சிறு பையன்—நகர்ப்
பொத்தகக் கடைநோக்கிப் போயினன் ஓர்நாள்!
மின்னும் எழில்வண்ணத் தோடு—அட்டை
மேனி பளபளக் கும்கதை நூல்கள்,

கண்ணைப் பறித்திடு மாறு—பல
காட்சி தருகின்ற கன்னியர் தோற்றம்
விண்ணைப் பழித்திடும் போக்கில்—தம்
வெற்றுடல் காட்டிடுந் தாளிகைக் கூட்டம்,

கொட்டை எழுத்தினில் சூடாய்—செய்தி
கொடுத்திடும் இழிநடை நாட்கம்பித் தாள்கள்
அட்டை பெருத்திடும் நூல்கள்—துப்
பறிகின்ற புதினங்கள், பாலியல் நூல்கள்,

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

சட்டையின் பையளவுள்ள —பல
சாக்கடைக் குப்பைகள், பேய்க்கதை நூல்கள்,
அட்டைகள் போலக் கயிற்றில்—சுவர்
ஆணியில்—எங்குமே தொங்கின; மீதி,

கொட்டிக் கிடந்தன அங்கே!—அந்தக்
குவியலைப் பொன்னன் பலமுறை நன்றாய்
தட்டிக்கொட் டிப்பதம் பார்த்தான்—பின்
தலையசைத்தான்; எழுந்தான்; நடை யிட்டான்!

சென்றவ னைக்கடைக் காரன்— "தம்பி
செல்வதேன்? உனக்கென்ன வேண்டுவ" தென்றான்.
"ஒன்றுமில்லை; எங்கள் வீட்டில்—உள்ள
ஓர்எருமை கன்று போட்டுள்ள தந்தக்

கன்றுக் கொருபெயர் வேண்டும்—இந்தக்
கடையினில் அதற்கொரு பொத்தகம் உண்டா?—
என்றுநான் பார்த்திட வந்தேன்—இங்
கில்லாமை யால்போகின் றேன்" என்று போனான்.

மெய்யாக வே, கடைக் காரன்—அந்த
மேலான(!) நூலில்லாத் தன்மைக்கு நாணிப்
பொய்யாய் ஓர் அஞ்சல் வரைந்தே—அன்றே
போட்டனன் சென்னைக்கு, கீழ்வருமாறு:

"பொத்தகம் அச்சிடுவோரே!—இங்குப்
புதுமுறை யாய்ஒரு பொத்தகம் தன்னை
எத்தனையோ மக்கள் கேட்டார்;—நூல்
இல்லை என் றுரைப்பது நம்குறை யன்றோ?

ஆகவே நாலைந்து நாளில்—ஓர்
அணிற்பிள்ளை முதலாகப் புலிக்குட் டி வரைக்கும்
நாகரிகப் பெயர் சூட்ட—ஒரு
நானூறு பக்கத்தில் பொத்தகம் வேண்டும்!"

—என்று பறந்ததே அஞ்சல்!—சென்ற
இரண்டொரு நாளில்பல் லாயிரம் நூற்கள்
குன்றாய்க் குவிந்தன! மக்கள்—பெருங்
கூட்டமாய்ச் சென்றதை வாங்கிச் சுவைத்தார்!

நன்று; நன்று; நாக ரீகம்!—மக்கள்
நாட்டங்கள் வாட்டங்கள் மிகமிக நன்று!
என்றைக்கு மக்கள் எல்லாரும்—உயர்
வெண்ணித் திருந்துவ ரோ? உயர் வாரோ?

-பெருஞ்சித்திரன்-

அமெரிக்க ஒன்றிப்பின் ஐம்பது நாடுகளும்
அவற்றின் பெயர் விளக்கங்களும்

வடகிழக்கு நாடுகள்.

1. மெயின் (Maine)-(ஆங்கிலம்) ''தலைநிலக் கடற்கரை''

2. நியூஆம்சையர் (New Hampshire)-(ஆங்கிலம்) இங்கிலாந்திலுள்ள ஆம்சையர் எனும் நகரைக் குறித்து வைக்கப்பட்ட பெயர்.

3. வெர்மாண்ட் (Vermont)-பிரஞ்சுச் சொல்லின், அமெரிக்க நாட்டுப்புற வழக்கு பொருள்: "பசுமையான மலைகள்"

4. மசாச்சுசெட்சு (Massachusetts)-(இந்தியன்) மாசு-அட்சு-செங்கு என்னும் குலத்தினர் பெயரைக் குறிப்பது; பொருள்: ''பெரிய மலையுறை மாந்தர்''

5. உரோடு அய்லண்டு (Rhode Island)-(டச்சு அல்லது ஆங்கிலம்) வழக்கிடப்பட்டது என்னும் பொருளது. நிலநடுக்கடலில் உள்ள உரோடு தீவின் பெயரால் அல்லது ''செந்தீவு'' (Red island) என்னும் டச்சுப் பெயரின் ஆங்கிலத் தழுவலாகப் பெயரிடப்பட்டது.

6. கனெக்டிக்ட் (Connecticut)-(இந்தியன்) ''நீண்ட ஆற்றுத்துறைமுகத்தில்'' எனும் பொருளது.

7. நியூயார்க்கு (New York)-(ஆங்கிலம்) 1664-இல் இந்நிலத்தின் குடியேற்ற உரிமை பெற்றவரான யார்க்கு என்னும் சிற்றரசரின் பெயரால் அமைக்கப்பட்டது.

8. பென்சில்வேனியா (Pennsylvania)-(இலத்தீன்) ''பென்னுடைய காடுகள்'' 1681-இல் குடியேற்ற முறைகண்ட வில்லியம் பென் என்பவர் பெயரால் அமைந்தது.

9. நியூசெர்சி (New Jersey)-(ஆங்கிலம்) செர்சி தீவைக் குறித்து வைக்கப்பட்ட பெயர்.

10 திலவார் (Delaware)-(ஆங்கிலம்) 1610-இல் வர்சினிய (Virginia) நாட்டுக் குடியேற்ற ஆளுநரான (Governer) தில வார் என்னும் பெருமகனாரைக் குறித்து வைத்த பெயர்.

11. மேரிலாண்டு (Maryland)-(ஆங்கிலம்) 1631-இல் ஆண்ட முதல்சார்லசு என்பாரின் மனைவியான என்ரெயித்தா மேரி அரசியின் பொருட்டு வைக்கப்பட்ட பெயர்.

12. ஒகியோ (Ohio)-(இந்தியன்) "நேர்த்தியான யாறு"

13. மிச்சிகன் (Michigan)-(இந்தியன்) "பெருநீர்ப்பரப்பு' அல்லது "துடைப்பது".

14. இண்டியானு (Indiana)-(இலத்தீன்) "இந்திய நிலம்"

15. விசுகன்சின் (Wisconsin)-(இந்தியன்) பொருள் புலனுக வில்லை. "பறவைகள் கூடுகட்டும் தன் கரையிடத்துப் பொந்துகளை யுடைய ஆறு" என்பதாக இருக்கலாம்.

16. இல்லினோயிசு (Illinois)-(இந்தியன்) ஈராக்கு நாட்டுப் பழங்குடியினரின் பொருட்டு அமைந்த பெயர். பொருள்: "துணி வுள்ள ஆடவர்"

தென்கிழக்கு நாடுகள்.

17. வர்சினியா (Virginia)
18. மேற்குவர்சினியா (West Virginia) } (இலத்தீன்) கன்னியரசி என அழைக்கப்பட்ட, இங்கிலாந்து நாட்டு முதல் எலிசபெத் அரசியின் பொருட்டு 1607-இல் பெயரிடப்பட்டன.

19. வடகரோலினு (North Carolina)
20. தென்கரோலினு(South Carolina) } -(இலத்தீன்) இங்கிலாந்தின் முதல் சார்லசு, இரண்டாம் சார்லசு ஆகியோர் பொருட்டு 1629, 1665-ஆம் ஆண்டுகளிற் பெயரிடப்பட்டன.

21. கெண்டகி (Kentucky)-(இந்தியன்) "பசும்புற்றரை"

22. டென்னசி (Tennessee)-(இந்தியன்) செரோக்கி இந்திய நகரின் பெயராக இருக்கலாம்; பொருள்: திட்டமாகத் தெரியவில்லை.

23. சார்சியா (Georgia) இரண்டாம் சார்சு அரசரின் பெயரால் 1732-இல் வழங்கப்பட்ட பெயர்.

24. அலபாமா (Alabama)-(இந்தியன்) அல்லபாமா பழங்குடியினர் பொருட்டு அமைந்த பெயர்; பொருள்: "அடர்ந்த காடுகளை அழிப்பவர்கள்"

25. மிசிசிப்பி (Mississippi)-(இந்தியன்) "பெரிய யாறு"

வட மைய நாடுகள்.

26. புளோரிடா (Florida)-(இசுப்பானியன்) "ஈச்டர் (Easter) காலம்"

27. மின்னிசோட்டா (Minnesota).(இந்தியன்) 'கலங்கல்நீர்'

28. வட டக்கோட்டா (North Dakota } (இந்தியன்) டக்
29. தென் டக்கோட்டா (South Dakota } கோட்டா பழங்குடியினரின் பொருட்டு வைத்த பெயர்; பொருள் தெரியவில்லை.

30. மாண்டோனு (Montona)-(இலத்தீன்) "மலைநிலம்"

31. லோவா (Lowa)-(இந்தியன்) ஒயூடோனன் பழங்குடியினர் பொருட்டு வைத்த பெயர். பொருள்தெரியவில்லை.

32. நெப்ராசுகா (Nebraska)-(இந்தியன்) "ஆழமான யாறு"

33. வியோர்வ்மிங் (Wyoming)-(இந்தியன்) "பரந்த சம வெளிகள்"

தென் மைய நாடுகள்.

34. மிசௌரி (Missouri)-(இந்தியன்) "பெரியசேற்றுநிலம்" அல்லது "பெரியபடகு" என்பது பொருள் ஆகலாம்.

35. கன்சாசு (Konsas)-(இந்தியன்) கன்சா பழங்குடியினராற் பெற்ற பெயர்; பொருள் தெரியவில்லை.

36. கொலரடோ [Colorado]-இசுப்பானியன் "சிவப்பு"

37. அர்கன்சாசு [Arkansas]-இந்தியன்-அல்கன்சாசு பழங்குடியினராற் பெற்ற பெயர்; பொருள் தெரியவில்லை.

38. லூசியானு [Louisiana]-பிரஞ்சு-பிரான்சு நாட்டுப் பதினுன்காம் லூயிசு மன்னன் பொருட்டு 1682-இல் வைக்கப்பட்டபெயர்.

39. ஒக்லகாமா [Oklahoma]-இந்தியன்-"செந்நிறமாக்கள்"

40. டெக்சாசு [Texas]-இந்தியன்-"நண்பர்களே" எனப் பொருள்படும் ஒரு வணக்கமுறை.

41. நீயூமெக்சிகோ [New Mexico]-இந்தியன்-மெக்சிகோ நாட்டு ஆசுடெக்சு பழங்குடியினராற் பெற்ற பெயர்; "கடவுளின் கோயில்" என்னும் பொருள் கொண்டது.

மேற்கு நாடுகள்

42. இடாகோ [Idaho]-இந்தியன்- "காலைவணக்கம்" எனப் பொருள்படும், கொமாஞ்சி பழங்குடியினரின் வரவேற்புச் சொல்.

43. வாசிங்டன் [Washington]-ஆங்கிலம்- ஒன்றிப்பு நாடுகளின் முதல் தலைவராகிய சார்சு வாசிங்டன் என்பவராற் பெற்ற பெயர்.

44. ஒரகன் [Oregon]-தோன்றிய முறையும் பொருளும் தெரியவில்லை; ஆயினும், 1715-ஆம் ஆண்டின் பிரெஞ்சு நாட்டுப் படத்தின் பதிப்புப் பிழையினால் ஏற்பட்டதென நம்பப்படுகின்றது.

45. ஊடா [Utah]-இந்தியன்-ஊட்டு பழங்குடியினர்பொருட்டு அமைந்த பெயர். பொருள் திட்டமாகத் தெரியவில்லை. "உயர்நிலத்தில் வாழ்பவர்கள்" என்று இருக்கலாம்.

46, நிவேடா [Nevada] -இசுபானியன்-"பனி புறைமேனிலம்"

47. கலிபோர்னியா [California]-இசுபானியன்- கலிபியா என்ற பெயருடைய அரசி ஆண்டதாகக் கருதப்படும், இசுபானியப் பழங்கதையில் வரும் தீவுடன் தொடர்புற்ற பெயர்.

48. அரிசோனு [Arizona]-இந்தியன்-"சிறிய நீரூற்று"

49. அலாசுகா [Alaska]-தீவுக்குறையைக் குறிக்கும் எசுகிமோ சொல்லின் உருசிய வழக்குமொழி.

50. அவாய் [Hawaii]-"தாய்நிலம்" எனப் பொருள்படும் நாட்டுப்புற மொழியினின்று தோன்றியதாகலாம்.

தலைமையகம்

கொலம்பியா மாவட்டம் [District of Columbia]-கூட்டாட்சியின் இருப்பிடம்; அமெரிக்காவைக் கண்டறிந்த கிறித்தவர் கொலம்பசு என்பவராற் பெயர் பெற்றது.

வாசிங்டன் [Washington]-கொலம்பியா மாவட்டத்திலுள்ள நகரம்; ஒன்றிப்பு நாடுகளின் தலைநகர்; முதல் ஒ. நா. தலைவரான சார்சுவாசிங்குடன் என்பவரது பெயரைக் கொண்டது.

(அடிப்படை: U. S. A.-Its Geography and Growth)

அறிவியல் வகை.

Hypsography–நில மேற்பரப்பியல்
Ichthyology–நீந்துவனவியல்
Immunology–தடுப்பாற்றலியல்
Linguistics–மொழியியல்
Lithology–பாறையியல்
Lithography–கல்லச்சுவியல்
Logic–தருக்கவியல்–ஏரணவியல்
Mathematics–கணக்கியல்
Metaphysics–மறைபொருளாய்வியல்
Meteorology–வானுய்வியல்
Microphotography–நுண்ணுருவொளிப்படவியல்
Microscopy–நுண்ணோக்கியல்
Minerology–கனியியல்
Mining–சுரங்கவியல்
Monadology–உயிரணுவியல்
Morophology–உடலமைப்பியல்
Morphology–உருவவியல்
Neurology–நரம்பாய்வியல்
Numerology–எண்ணியல்
Obstetrics–மகப்பேற்றியல்
Oceanography–கடலியல்
Ornithology–பறப்பனவியல்
Orology–மலையியல்
Orthography–எழுத்தியல்
Palaeontology–தொல்லெலும்பியல், தொல்லுயிரியல்.
Palaeography–தொல்லெழுத்தியல்
Palmistry–கைவரைவியல்
Pedology–மண்ணியல்
Petrology–பாறையியல், மாழையியல்(உலோகவியல்)
Penology–குற்றவியல்
Physics–விளங்கியல், பூதவியல்.
Physiology–உடலியல்

Photo-chemistry-ஒளியியைபியல்
Phisiography-நிலவுருவியல்
Phyto geography-நிலைத்திணைப் பரப்பியல்
Philosophy-மெய்ப்பொருளியல், மெய்யறிவியல்.
Philology-மொழிநூலியல்
Phonetics-ஒலியியல்
Phonology-குரலொலியியல்
Phrenology-மண்டை ஆய்வியல்
Physiognomy-முகவாய்வியல்
Pneumatics-காற்றுய்வியல்
Potanology-ஆற்றியல்
Politics-அரசியல்
Pomiculture-பழப்பயிரியல்
Psychiatry-உளமருத்தியல்
Psychology-உளவியல்
Seismalogy-நிலநடுக்கவியல்
Sexology-பாலியல்
Socialogy-குமுகாயவியல்
Social Psychology-குமுகாய மனவியல்
Technology-நுண்தொழிலியல்
Theology-சமயவியல்
Toxicology-நச்சியல்
Typography-அச்சீட்டியல்
Zoology-விலங்கியல்
Zoography-விலங்குப்பண்பியல் [முற்றும்]

தமிழ்ச்சிட்டு, கடலூர்-1

(தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்)

மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்.

	உள்நாடு.	வெளிநாடு.	கொழும்பு.
ஆண்டுக்கட்டணம் உருபா	3-00	5-50	4-00
தனியிதழ் ,,	0-25	0-45	0-35

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!



பெரியோர் கதை!

வில்லியம் சேக்சுபியர்

-சேயிளங்கண்ணன்-

சேக்சுபியர் ஓர் ஆங்கில நாடக ஆசிரியர். அவர் ஓர் ஆங்கில மெய்யறிவாளரும் ஆவார். சேக்சுபியர் பற்றிய வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் தெளிவுபடப் போதுமானதாகக் கிடைத்தில. எனினும் பலஆங்கில அறிஞர்கள் ஒருவாறு ஆய்ந்து உணர்ந்துஉண்மையுறுவகையில், அவரின் வரலாற்றைத் தொகுத்துக் கூறியுள்ளனர். அறிஞர் சேக்சுபியரது வரலாறு, அவர் இறந்த நூறு ஆண்டுகட்குப் பின்னரே திரு. நிக்கோலாசு உரோவுவே என்பவரால் முதன்முதல் எழுதப்பட்டது.

உரோவுவேயின் கருத்துப்படி, "சேக்சுபியர் பிறரிடம் நெருங்கிப் பழகாமையும், தம்மைப் பற்றிக் கூறிக்கொள்ளாமையும், அவரது இயல்பான வெட்குந் தன்மையும் அவரைப் பற்றிப் பிறர் விளக்கமுற அறிய இயலாமற் செய்தன" எனத் தெரிகிறது.

உவார்விக்சயரிலுள்ள இசுட்டிராட்டுஃபோர்டு-ஆன்-அவோன் என்னுமிடத்து, தி. பி. 1595-ஆம் ஆண்டு, மேழத் திங்களில் 'வில்லியம் சேக்சுபியர்' பிறந்தார். சான் சேக்சுபியர் அவர் தந்தையாராவார்; அவர் ஒரு வணிகர். வில்லியம் சேக்சுபியர் உள்ளூரிலே உள்ள சிறிய இலக்கணப் பள்ளி ஒன்றில் கல்வி கற்றார். எளிய குடும்பத்தைச் சார்ந்த அவர் தொடர்ந்து மேல் கல்வி கற்க இயலாததால், தம் கஅ (18)-ஆம் அகவையில் 'ஆன்னி காத்தவே' என்ற பெண்ணை மணந்தார்.

அவர் ஏறத்தாழ தி. பி. 1616-இல் இசுட்டிராட்டு போர்டை விட்டு நீங்கி, இலண்டன் நகர்க்குக் குடிபெயர்ந்தார். இதற்கான காரணியம் யாதென அறிய இயலவில்லை. ஏறத்தாழ தி. பி. 1623-இல்

'இராபர்ட்டு கிரீன்' போன்று, எல்லாரானும் விதந்துகூறும் வண்ணம், ஒரு நாடக ஆசிரியரானுர் என்று வரலாறு கூறுகிறது.

தி. பி. 1624-ஆம் ஆண்டளவில் அவரது உள்ளத்தினின்று முகிழ்த்த முதற்பாடல், "வீனசும் அதோனிசும்" என்பதாம். பின்னர் அவர் சில மேடை நடிகர்களொடு சேர்ந்து, தம் நாடக வாழ்வைத் தொடங்கினுர். தி. பி. 1622 முதலாக இருபது ஆண்டுகளில் நகையும், அழுகையும், இளிவரலும், மருட்கையும் நிறைந்த கூஎ (37) நாடகங்களை உருவாக்கினுர். தாம் எழுதும் நாடகங்களில் தாமும் நடித்தார்.

அவர் ஆக்கிய நாடகங்கள் ஏறத்தாழ நூறு ஆண்டுகள் வரை, வெளியாரால் உணரப்படாமல் இருந்தன. கரணியம் என்னை எனின், அவர் எழுதி நடத்தி முடித்த நாடகங்களைப் பற்றி நடித்து முடித்த பின்பு கருத்துச் செலுத்துவதில்லை; அவற்றை இக்கால எழுத்தாளர் போன்று நூல் வடிவில் வெளியிடவுமில்லை. நாடகங்கள் அனைத்திலும், தமது உள்ளத்தில் முகிழ்த்த அரிய கோட்பாடுகளை, கருத்துகளைக் கொட்டினுரே அன்றித் தம்வாழ்வு நிகழ்ச்சிகள் பற்றிக் கூறினுரிலர். இதினின்று அவர் விளம்பரம் விரும்பாதவர் என்பது பெறப்படும்.

இவர் நாடகங்கள் மூலம் பெற்ற வருவாயினைக் கொண்டு, இசுட்டிராட்டு போர்டில் மிகப்பெரிய வீட்டையும், சில நிலபுலன்களையும் வாங்கினுர். சேக்சுபியர் வரைந்தவற்றில், உனது விருப்பம் போல, பன்னிரண்டாம் இரவு, சூலியசு சீசர், மாக்குபெத், புயல் என்பன சிறந்த, உணர்ச்சி வெளிப்படும் நாடகங்கள் என ஆங்கில அறிஞர்களால் பாராட்டி உரைக்கப்படுகின்றன.

அவர் ஏறத்தாழ, தி. பி. 1642-இல் நாடகவுலகை விட்டு நீங்கி, அமைதியாகக் காலத்தைக் கழிப்பதில் முனைந்தார். தம்முடைய தாயகத்துக்கே திரும்ப வந்து, ஐந்து ஆண்டுகள் ஓய்வுக்குப் பின்னர், தி. பி. 1647-ஆம் ஆண்டு இவ்வுலகை விட்டு நீங்கிப் புகழுடம்பு எய்தினுர் என்பர்.

"ஒன்ரு உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்ருது நிற்பதொன் றில்" —குறள் 233.

ஒலியடியாகச் சொல் பிறக்கும் வகை.

(பாவாணர் நூலிலிருந்து தொகுத்தவர்: சேயிளங்கண்ணன்.)

மக்கள் தம் உள்ளத்து முகிழ்த்தெழும் உணர்வுகளைத் தம் வாய் வழித் தம்மையறியாமலே வெளிப்படுத்தும் ஒலிகள், உணர்வொலிகள் எனப்படும். அவ்வாறு வெளிப்படுத்தும் உணர்வொலிகளால் குறிப்பாகச் சில சொற்கள் பிறக்கின்றன.

உணர்வு கரணியமாய்ப் பிறக்கும் ஒலிகள்:

உணர்வு	—	ஒலி
மகிழ்வு	—	ஆ, ஊ, ஏ, ஐ, ஆய், ஓ.
நோவு	—	ஆ, ஈ, ஊ
வியப்பு	—	ஆ, ஆஆ(ஆவா)-ஆகா....
இழிவு	—	ஊ, பூ.
இரக்கம்	—	ஆ, ஆஆ-ஆவா.
தெளிவு	—	ஓ, ஓஓ-ஓவோ-ஓகோ.

உணர்வடியாகப் பிறக்கும்-அவ்வொலிகளைச் சார்ந்து பிறக்கும் சொற்கள்.

ஒலிக்குறிப்பு.	—	சொல்
சப்(பு)	—	சப்பு-சப்பிடு-சாப்பிடு-சாப்பாடு.
சுவ(க்கு)	—	சவை, சுவை.
கறு	—	கறி
கடு	—	கடித்தல்.
இக்(கு)	—	விக்கு-விக்கல்.
ஏவ்	—	ஏப்பம்.
இஇ, இசி.	—	இசி-சிரி.
கெக்க, கெக்க.	—	கெக்கரி.
து	—	துப்பு.
கார்	—	காறு.
குறட்டு	—	குறட்டை.
சீ	—	சீழ்க்கை
வீள்	—	வீளை.
மா	—	மாடு.

அட்டைப்பட விளக்கம்:

தென்னகத்தின் கருப்பொன்

உலகம் முழுவதிலும் மிளகின் தேவை பெருகி வருகிறது என்று அண்மையில் நடைபெற்ற ஓர் ஆய்விலிருந்து புலனாகிறது.

மிளகு விளைவிற்குப் பெயர்பெற்ற நாடுகளில் இந்தியாவும் ஒன்று. மிளகு ஏற்றுமதியால் ஆண்டுதோறும் இந்தியாவுக்கு 2 கோடி தாலர் (உரு. 15 கோடி) வெளிநாட்டுச்செலாவணி வருமானம்.

மிளகுக்குக் 'கருப்பொன்' என்று மற்றொரு பெயரும் உண்டு. இந்தியாவில் கேரளத்தில்தான் மிளகு மிகுதியாக விளைகிறது. உண்மையில் பல நூற்றாண்டுகளாக உலகம் எங்குமிருந்து வணிகர்கள் மலையாளம் வந்து மிளகு வாங்கிக்கொண்டு சென்றுள்ளனர். கேரளத்து மிளகுதான் முதன் முதலாக உலகம் அறிந்த மிளகு.

இடைக்காலத்தில் (கி. பி. 600-1500) மிளகுக்கு விலையாக எடைக்கு எடை வெள்ளி கிடைத்தது. அந்நாளில் மிளகு விளை நிலத்துக்கு வரியாக ஒரு கொத்து மிளகு கொடுத்தால் போதும்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

காள்–காழ் — காழகம், கழுதை.
ஒள் — ஒள்ளை.
குர் — குரங்கு.
கீர் — கீரி.
சரசர (நகர்வதால் எழும் ஒலி) — சாரை.
காகா — (காக்கை) காக்கா.
கூ — குயில்
கூம் — கூகை.
சிள் — சிள்.
ஈ — ஈ
உர் — உரறு, உறுமு (உறுமி)
ஊள் — ஊளை.
கும் — குமுறு.
கே — கேர், கேரு–கேருதல்.
இம் — இமிர்–ஞிமிறு.

பழங்காலத்தில் மிகவும் செலவு செய்து, தரைவழியாகவே வெளி நாட்டவர்கள் மிளகு கொண்டு சென்றார்கள். பிற்காலத்தில் கடல்வழியாக மிளகு ஏற்றுமதி நடைபெறத் தொடங்கிய பின்பே விலை குறைந்தது.

ஆனால் வரலாறு முழுவதும் மிளகின் பெருமை என்றும் குன்றியதில்லை. எகிப்துநாட்டில் இறந்துபோனவர்களின் உடல்களை நெய் பூசிக் காப்பது முதல், உணவுக்குச் சுவை சேர்ப்பதுவரை பலப்பல செயல்களுக்கு மிளகு பயன்பட்டு வந்துள்ளது.

இன்று உலகிலேயே மிகுதியும் மிளகு இறக்குமதி செய்யும் நாடுகளில் ஒன்றாக அமெரிக்கா விளங்கி வருகிறது. நியூயார்க் பங்கு அங்காடியில் உலக மிளகு வணிகம் நடைபெறுகிறதென்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.

அமெரிக்க நாடு கண்டுபிடிக்கப்படுவதற்கே மிளகு ஒருவகையில் காரணம் என்று சொல்லலாம். ஒரு விருந்தில் மிளகு இல்லாததால் சீற்றமுற்ற இசுபெயின் நாட்டு மன்னர் பெர்டினாந்தும், அரசி இசபெல்லாவும், மிளகு விளையும் நாடான இந்தியாவுக்குக் கொலம்பசு குறுக்குவழி கண்டுபிடிக்க உதவி செய்ததால்தானே அமெரிக்காவே கண்டுபிடிக்கப்பட்டது.

இன்று மிளகு விளைவில் மற்ற நாடுகளும் இந்தியாவுடன் போட்டி போடுகின்றன. எனவே இந்தியா மிளகு விளைச்சலைப் பெருக்குவது இன்றியமையாதது.

உலகில் மொத்த மிளகு விளைவு 90,000 கல்லெடை (TON) ஆகும். இந்தியா, இந்தோனேசியா, சாரவாக், பிரேசில் ஆகிய நாடுகள் மட்டுமே இதில் பத்தில் ஒன்பது பங்கு விளைவிக்கின்றது. இந்தியாவில் மட்டும் 30,000 கல்லெடை விளைகின்றது.

இந்திய மிளகு விளைச்சலில் பத்தில் ஒன்பது பங்கு கேரளத்தில் விளைவதாகும். கல்லெடைக்கு உயர்ந்த விலை உருபா. 11,000 தமிழ்நாடும், மைசூர் மாநிலமும் சேர்ந்து எஞ்சிய மிளகை விளைவிக்கின்றன.

முகாமையான மிளகு வணிக நகரங்களில் ஒன்று ஆலப்புழை. சின்னஞ்சிறு கடற்கரைப் பட்டினம், இது; பல நூற்றாண்டுகளாகவே மிளகு ஏற்றுமதிக்கு உலகப் புகழ்பெற்று விளங்கி வருகிறது.

துயில் கொள்ளுவது போலக் காட்சி தருவது, ஆலப்புழை. கேரளத்தின் பசுமையான நீர்வழிகளில் மிளகு ஏற்றிக்கொண்டு எட்டாத்தொலைவுகளிலிருந்து கட்டுமரங்கள் ஆலப்புழை வருகின்றன. மிளகுச் சந்தை நடக்கும் ஆற்றங்கரைகளில் மீன்கள் போலப் படகுகள் மொய்ப்பதைக் காணலாம்.

பேரம் சுறுசுறுப்பாக நடைபெறும். காத்திருக்கும் வண்டிகள் மிளகை ஏற்றிக்கொண்டு, ஏற்றுமதியாளர்களின் முற்றங்களில் கொண்டு போய்க் கொட்ட, மிளகை எடைபோட்டுத் தூய்மைசெய்து, வெயிலில் உலரவைப்பார்கள்.

அரசு கடுமையான தரக்கட்டுப்பாடு செய்திருப்பதால் மிளகு ஏற்றுமதிகள் மேலும்மேலும் பெருகுகின்றன. "எங்கள் மிளகின் தரம் குறித்து வெளிநாட்டு வணிகர்களுக்கு முழு நம்பிக்கையுண்டு" என்று ஆலப்புழையில் உள்ள பெரிய ஏற்றுமதி வணிகர்கள் கூறுகின்றனர்.

ஆலப்புழை மிளகு ஏற்றுமதிக் கழகத்தின் துணைத்தலைவர் சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்கா போயிருந்தார்; நியூயார்க்கிலுள்ள வணிகர்களை நேரில்கண்டு பேசினர். "எங்கள் மிளகை மிகுதியாக வாங்குவது அமெரிக்காதான்; 'மெக்கார்மக்' உள்படப் பல புகழ் பெற்ற நிறுவனங்களின் பெயரில் விற்பனை செய்யப்படுவதற்காக ஆலப்புழை மிளகு தூளாக்கப்பட்டு அமெரிக்கப் பெருவணிக நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது" என்று அவர் தெரிவிக்கிறார். மிளகு நாலு வகையாக விற்பனையாகிறது-முழு மிளகு, மிளகுத்தூள், கருமிளகு, வெண்மிளகு.

பொதுவாக சூன் மாதத்தில் மிளகு நடுகை நடக்கும். மூன்றுண்டுகளில் அது காய்க்கும். மிளகுக் கொடி சராசரி 30 ஆண்டுகள் பலன் தரும்.

கொடி முந்திரி (திராட்சை) போலவே, மிளகுக் கொடியையும் கொழுகொம்புகளிலும் பந்தல்களிலும் படரவிடலாம்.

மிளகு மணிகள் பழுத்து, 'செக்கச்செவேல்' என்று இருக்கையில் அறுவடை செய்வார்கள். வெயிலில் உலர்ந்தபின் கருமிளகு கிடைக்கிறது. தோல் நீக்கிக் காயவைத்தால் வெண்மிளகு.

தொன்றுதொட்டு இன்றுவரை மிளகு ஒரு பயனுள்ள பொருள். இன்று அது நாட்டின் பொருள் வளத்திற்கு வலிமை ஊட்டும்பொருள்.

—நன்றி: 'அமெரிக்கன் ரிப்போர்ட்டர்.'

பெருக்கலில் சுருக்கம்

-பாவை-நடவரசன்.

பெருக்கல் என்பது ஒருவகைக் கணக்கு. அது கூட்டலின் சுருக்கம் ஆகும். பத்தை நான்குமுறை கூட்டினல் நாற்பது வரும். $10+10+10+10=40$. இப்படிக் கூட்டுவதால் நமக்கு இடமும் தேவைப்படுகிறது; நேரமும் தேவைப்படுகிறது. அதனையே பெருக்கலில் $10 \times 4 = 40$ எனச் சுருக்கமாக எழுதிவிடலாம். அதனுல் இடமும் குறைகிறது. நேரமும் குறைகிறது.

கூட்டலின் சுருக்கமாகிய பெருக்கலிலும் ஒரு சுருக்கம் இருக்கிறது. அதனை முறையாகத் தெரிந்து கொண்டால், கணக்கினை விரைவாகப் போடலாம். அதற்கு முதன்முதலாகப் பெருக்கலில் உள்ள ஈர் [இரண்டு] எண்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்: ஒன்று, பெருக்கும் எண்; மற்றென்று, பெருக்கப்படும் எண். இவை பலருக்கும் தெரிந்த ஒன்றுதான்; என்ருலும் மீண்டும் நினைவுபடுத்தினேன்.

விளக்கம்: 75×35. இதில் பெருக்கும் எண் $= 35$; பெருக்கப்படும் எண் $= 75$.

பெருக்கும் எண்ணிலும் பெருக்கப்படும் எண்ணிலும் ஈற்றில் ஐந்து [5] வந்திருந்தால் அவற்றை எப்படிப் பெருக்க வேண்டும் என்பதை முதற்கண் படிப்போம்:

அதற்குமுன், கொடுத்திருக்கும் எண்களை எப்படி எண்ணிச் சொல்லவேண்டும் என்பதை நினைவுபடுத்துகிறேன்: கொடுத்திருக்கும் எண்ணை வலமிருந்து இடமாக ஒன்று, பத்து, நூறு, ஆயிரம்...... என அதன் நிலைகளை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி எண்ணிப் பார்த்த பின்னர் இடமிருந்து வலமாக அதன் நிலைக்குரிய மதிப்பெண்ணை முறையாகச் சொல்லி வரல் வேண்டும்.

விளக்கம்:- 745:- இதை எப்படி எண்ணிச் சொல்லவேண்டும்? முதற்கண் எண்ணை வலமிருந்து இடமாக எண்ணினுல் ஒன்று, பத்து, நூறு என்னும் மூன்று நிலைகள் கிடைக்கின்றன. அவற்றை இடமிருந்து வலமாக அவற்றின் நிலைக்குரிய மதிப்பெண்களை வைத்து, எழுநூற்று நாற்பத்தைந்து, எனச் சொல்லல் வேண்டும்.

க. பெருக்கும் எண்ணும் பெருக்கப்படும் எண்ணும் ஒரே எண்ணாக இருக்குமானுல், முதற்கண் ஈரெண்களின் ஒன்ரும் நிலையில் உள்ள எண்களைப் பெருக்கி வைத்துக்கொள்ள வேண்டும். $5 \times 5 = 25$

அதற்குப் பின்னர், பெருக்கும் எண்ணின் பத்தாம் எண்ணுடன் 1-ஐக் கூட்டிப் பெருக்கப்படும் எண்ணின் பத்தாம்நிலை எண்ணால் அதனைப் பெருக்குதல் வேண்டும். அப்படிப்பெருக்கிய அந்த எண்ணை முதற்கண் பெருக்கி வைத்திருக்கும் எண்ணின் இடப்புறத்தில் எழுதிக்கொள்ள வேண்டும். இதுதான் ஈரெண்களின் பெருக்குத் தொகையாகும்.

விளக்கம்:- [அ] 95×95

ஈரெண்களின் ஒன்றும் நிலையைப் பெருக்குதல் $5 \times 5 = 25$

பெருக்கப்படும் எண்ணின் பத்தாம்நிலை எண்ணுடன் 1-ஐக் கூட்டுதல் } $= 9 + 1 = 10$

கூட்டிய எண்ணைப் (10) பெருக்கும் எண்ணின் பத்தாம்நிலை எண்ணால் [9] பெருக்குதல் } $= 10 \times 9 - 90$

90-ஐ, 25-க்கு இடப்புறம் எழுதிக்கொள்ள வேண்டும்.

∴ விடை $= 9025$.

முதன்முதல் கணக்கினைப் படிக்கின்றபொழுது-பார்க்கின்றபொழுது புரியாமல் இருக்கலாம். மீண்டும் படித்துப் பாருங்கள். நன்றாகப் புரியும். வழியைத் தெளிவாகத் தெரிந்துகொண்டு, கணக்கினை முறையாகச் செய்தால், விரைவாகச் செய்யலாம்; விடையும் சரியாக வந்துவிடும்.

முன்செய்த கணக்கினை அதே வழியில் சுருக்கமாக எழுதுகிறேன். பாருங்கள்.

95×95:—

$5 \times 5 = 25$ விடையின் பத்தாம், ஒன்றும் நிலை.

$[9+1] \times 9 = 90$ விடையின் ஆயிரம், நூறும் நிலை.

∴ விடை $= 9025$.

[ஆ] 35×35:—

$5 \times 5 = 25$ விடையின் பத்தாம், ஒன்றும் நிலை.

$[3+1] \times 3 = 12$ விடையின் ஆயிரம் நூறும் நிலை.

[இ] 125×125;— இப்படிப் பெருக்கும் எண்ணும் பெருக்கப்படும் எண்ணும் சமமாக இருக்குமானால், பத்தாம், நூறும்நிலை எண்களைப் பத்தாம்நிலை எண்ணாக வைத்துக்கொண்டு மேலே செய்தபடி செய்தல் வேண்டும்.

12 5 12X5

5X5 = 25 விடையின் பத்தாம் ஒன்றும் நிலை.

[12 + 1]X12 = 156 விடையின் பத்தாயிரம், ஆயிரம், நூறும் நிலை.

∴ விடை = 15625.

[தொடரும்]

தமிழிலிருந்து ஆங்கிலத்துக்குச் சென்ற சொற்கள்.

(பாவாணர் நூல்களினின்று தொகுத்தவர்:
செங்கிப்பட்டி அர. இராமையன்.)

பட்டு (அடித்தல் ஒலிக் குறிப்பு)-Beat
படகு-Bark, Barge
படி (படிதல்)-Mode, mood
படு, படை-Bed
படு-Derivatives, Passion, passive etc.
பரத்து-Spread
பரந்த-Broad
பரசு(ஏத்துதல்)-Praise
பரசு(மேலாகஅலகிடல்)Brush
பரிசு-Prize
பலகை-Plank
பழைய-Derivative-Paleography, Paleontology etc.
பளிச்சு(பளிச்சிட்டது)-Flash
பறி(வளை பறித்தல்)-Burrow
பாவை-Pup, puppy, puppet etc.
பாளி(நகர்)-Derivatives-police, policy, polity, politic, politics, Metropolis, Cosmopolitan etc.
பாளி(சிறுகுளம்)-Pool
பானை-Pan
பிசின்-Viscid, Viscir
பாகன், பாங்கன்-page
பாசி-Moss
பார்ப்பு, பார்ப்பா, பாப்பா-Babe, Baby

பிடற்று, பிணற்று-Prate
பிரி-Part
பிரிவு-Part
பிள-Split
பிளிறு-Blare
பிற்கு-Back
பிறங்கு-Bright
பின்று-Hind
பீச்சு-Piss
பீத்து-Boast
புட்டம்-Buttock
புட்டி-Butt
புட்டில்-Bottle
புடா, போடா-Bittern
புடை-Bary
புரம், புரி-Burg
புரள்-Parl
புரி(விரும்பு)-Friend
புரிசை-Mural
புருவம்-Brow
புரை(சமம்)-par
புரை(உயர்வு)-pear
புரை(துளை)-pore
புல்லா(எருது)-Bull
புழுதி-Mould
புழை-pglon

பார், பாரை-par
பார்(தடை)-Derivatives,
Bar, Barring etc.
பாரை(மீன்வகை)-parr, par
பாவு-pave
பிட்டு-pelly
பிடுங்கு-Break, pluck
பையுள்-pain
பொக்கணம்-pack
பொக்குளம்-pock, pox.
பொகு-poke
பொச்சு, பொச்சை-pouch

பொட்டு, பொட்டல்-Spot
பொடுகு-porrigo
பொத்து-patch
பொல்(பொலிவு)-Belle
பொல், பொள்-Bore
பொறு-Bear, port, Brook
போடு-put
போர்-War
மன்-Man
மால்-Mole
மாற்று-mutation
மிக்க, மிக்கு-much
மிசை(உண்)-mess
முக்கு(தெருமூலை)-Nook
முட்டு-butt, abut
முட்டு(சந்தித்தல்)-mote, moot
மொட்டு-bud
முதிர்-mature
முயல்(முயல்தல்)-moil
முல்லை(நிலம்)-moor

பூசல்-Fuss
பூசை(பூனை)-pussy
பெறு-parent
பெறுதி-Worth
பேம்-Foam
பேய்-Fay
பையன், பையல்-Boy
மகன்-Mac
மசக்கு-Mix, Maze
மசியல்-Mash, Mess
மடல்-petal
மடை(உணவு)-Meat (Originally Food)
மதி-Mete
மருள்-Marvel, admire
மலை-Militate
மழு-Mall, Maul
மறி-Mare
மன்-Rcmain, permanent
மனை-Mansion
மன்-many
முழாசு(ஒளிர்)-blazc
முழுகு-merge-Submerge,
Emerge, Immerge
முறுமுறு-murmur
முனகு, முனங்கு-moan
மூக்கு-mucus
மூக்கு-beak
மூங்கா-mungoose
மூஞ்சி-muzzle
மூளை-marraw
மெது-smooth
மெல்(லிய)-mellow, molluse
melacoderim

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.